**5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்**

**( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)**

**MCOP No.1673/2023**

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா.1 |
| பெயர் | சதாம் உசேன் |
| க/த.பெயர் | அப்துல் ரசாக் |
| வயது | 32 |
| விலாசம் | திருவல்லிக்கேணி, சென்னை |
| தொழில் | |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 16.07.25 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். விபத்து பதிவேடு மசாஆ1. முதல் தகவல் அறிக்கை மசாஆ2. புறநோயாளி சீட்டு மசாஆ3. காய சான்று மசாஆ4. ஓட்டுநர் உரிமம் மசாஆ5. ஆதார் அட்டை மசாஆ6. பேன் கார்டு மசாஆ7. வங்கி கணக்கு புத்தகம நகல் மசாஆ8.

## 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து 19.02.2023 அன்று இரவு 12 மணிக்ககு மேல் நடந்தது. வேலை முடிந்து வந்து கொண்டிருந்தேன். விபத்து ஏற்பட்ட உடன் ராயபேட்டை அரசு பொது மருத்துவமனையில் ஒரு நாள் உள்நோயாளியாக இருந்தேன். அதன் பிறகு ஆர்தோ மெட் மருத்துவமனையிலும் ஒருநாள் உள்நோயாளியாக இருந்தேன். மருத்துவ பில்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டியோ இருசக்கர வாகனம் என் வண்டியின் பின்புறம் இடித்தது. அந்த சாலையில் போக்குவரத்து சிக்னல்கள் இல்லை. ஏன் 15 நாட்கள் தாமதமாக புகார் அளித்தேன் என்றால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இருந்தால் அளிக்கவில்லை. விபத்து என்னுடைய கவனகுறைவால் தான் ஏற்பட்டதால் தான் வரைபடம் மற்றும் குற்றபப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்டது சொற்ப காயம் தான் என்றால் சரியல்ல. அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தொழில், வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொடர் சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்பின் கீழ் தான் கோரியுள்ள இழப்பீடுகள் மிகவும் அதிகம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல ` கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5 வது நீதிபதி**
**சென்னை**